**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**O.S.46/2008**

**நாள்.12.11.2021**

**வா.சா.1 ஆயிஷாபீவி**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கு விபரங்களை நான் தான் எனது வழக்கறிஞருக்கு கூறினேன். ரைகாபீவி எனது உடன்பிறந்த சகோதரி என்றால் சரி. தாவா வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எங்கள் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள், அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து தங்கள் தாயாரான கதீஷாபீவி-க்கு கிரையப்படி பாத்தியப்பட்ட சொத்தா? என்றால் ஆமாம். எனது தாயாரின் கிரைய அசல் பத்திரம் என்னிடம் தான் உள்ளது. அந்த கிரையப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா? என்றால் இல்லை. தங்கள் தாயார் கதீஷாபீவி தாவா சொத்தை கிரையம் பெறும் போது அந்த சொத்தில் 3 ஓட்டுவீடுகள் வடக்கு பார்த்து இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டில் முன்பக்கம் திண்ணை உள்ளது என்றால் சரி. அந்த திண்ணையில் தான் வீட்டில் உள்ள மூன்று குடும்பங்களும் சமையல் செய்வார்கள் என்றால் சரி. மேற்படி ஓட்டுவீடுகளின் சுவற்றில் தென்புறத்தில் உள்ள ஓடுகள் சுவற்றின் மீது தான் வைத்து வேயப்பட்டுள்ளது என்றால் சரிதான். தங்கள் வீட்டிற்கு தென்புறத்தில் பாபுசேட்-க்கு சொந்தமான வீடும், காலியிடமும் உள்ளது என்றால் சரி. தங்கள் வீட்டிற்கும், திண்ணைக்கும், பிரதிவாதிகளில் காம்பவுண்ட் சுவருக்கும் இடையில் இடைவெளி விட்டு 6 மீட்டருக்கு சிமிண்ட் தளம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சிமிண்ட் தளத்தில் வடகிழக்கு மூலையில் 3 பாத்ரூம் உள்ளது என்றால் சரி. அதில் 2 பாத்ரூம் தெற்கு பார்த்தும், 1 பாத்ரூம் மேற்கு பார்த்தும் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீடு ஏற்கனவே வடக்கு பார்த்த கூரைவீடு இருந்தது என்றால் சரி. அந்த கூரை வீட்டிற்கு ஏற்கனவே நான்குபுறமும் காம்பவுண்ட் சுவர் இருந்தது என்றால் உள்ளது, பின்னிட்டு வழக்கறிஞர் கிழக்கு பக்கமும், மேற்குபக்கமும் காம்பவுண்ட் சுவர் இருந்ததா? என்று கேள்வி கேட்டதற்கு இருபக்கமும் உள்ளதாக சாட்சி சாட்சியம் அளிக்கிறார். மேற்படி கூரை வீடு பிரதிவாதிக்கு சொந்தமான தென்புறம் சுவற்றில் தான் இருந்தது என்றால்

ஆமாம். அந்த தென்புறம் சுவற்றை பொறுத்து அவர்கள் எந்த டேமேஜ்-ம் ஏற்படுத்தவில்லை என்றால் அவ்வபோது வந்து பூசிசெல்வார்கள். தங்கள் வீட்டிற்கும், பிரதிவாதியின் காம்பவுண்ட்-க்கும் கீழ்புறத்தில் தென்கிழக்குமூலையில் இருந்து வடமேற்கு நோக்கி கிராஸ்-ஆக பாதை செல்கிறதா? என்றால் நேராக தான் பாதை செல்கிறது. அந்தப்பாதை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நேராக செல்கிறதா? என்றால் ஆமாம். மாரம்பாடி ரோடானது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்கிறதா? அல்லது அது கிராஸ்-ஆக செல்கிறதா? என்றால் வடக்கில் இருந்து தெற்காக செல்கிறது. மாரம்பாடி ரோட்டில் இருந்து பிரிவு ரோடு தென்கிழக்கில் இருந்து வடமேற்கு மூலை வரை சென்று நாடார் ஹோட்டல் மெயின் ரோட்டில் முடிவடைகிறதா? என்றால் ஆமாம். தாங்களும், தங்கள் சகோதரியும் பிரதிவாதியின் நிலத்தை அனுபவிக்க விடாமல் இடையூறு செய்வதாக அசல் வழக்கு எண்.152/2008 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியவில்லை. தங்களுக்கு 297 என்ற எண்ணில் பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பட்டாவின் அடிப்படையில் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. அசல் வழக்கு எண்.152/2008 ல் நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டார். அசல்வழக்கு எண்.152/2008 வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிடும் போது தாங்களும், தங்கள் சகோதரியும் உடன் இருந்தீர்களா? என்றால் ஆமாம். பிரதிவாதிகள் அவர்களது இடத்தில் இருந்து கூரை வீட்டை இடித்து, புதுவீடு கட்டுவதற்காக பில்லர் அமைத்தார்களா? என்றால் அமைத்தார்கள், எங்கள் இடத்தில் 2 அடி தள்ளி பில்லர் அமைத்தார்கள். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் பில்லர் பிரதிவாதிகள் அமைத்தார்கள் என்றாலும், அவர்களை வீடு கட்ட விடக்கூடாது என்பதற்காக ஆக்கிரமிப்பு செய்ததாக கட்சி கட்டி வருகிறீர்கள் என்றால் எங்கள் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தங்களுக்கு சொந்தமான இடத்தில் கிழமேல் அடி, தென்வடல் அடி எவ்வளவு என்றால் கிழமேல் 21 அடி சுவர், தென்வடல் 33 அடி உள்ளது. எனக்கு எழுதப்படிக்க தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 சான்றாவணம் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது தான். வா.சா.ஆ.1 சான்றாவணத்தில் கிழமேல் 21 அடி சுவர், தென்வடல் 33 அடி பற்றி

குறிப்பிடப்பட்டுள்ளதா? என்றால் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.2 சான்றாவணம் தாக்கல் செய்து விட்டு, தங்கள் தாயார் பெயரில் உள்ள ஆவணத்தை தாக்கல் செய்தால் உண்மை நிலவரம் தெரியவந்து விடும் என்பதால் தங்கள் தாயார் பெயரில் உள்ள ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தங்கள் பிராதில் தாவா சொத்து தங்கள் தாயாருக்கு கிரையப்படி பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரி தாங்கள் வேண்டுமென்றே தங்கள் தாயாரின் அசல் ஆவணத்தை மறைக்கிறீர்கள் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 சான்றாவணமானது நத்தம் நிலவரி திட்டத்திற்கு பின்னிட்டு தங்கள் தாயாருக்கு வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். கதீஷாபீவி பெயருக்கு வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் தான் தங்கள் பெயருக்கான சிட்டா வா.சா.ஆ.4 சான்றாவணம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 சான்றாவணத்தில் கதீஷாபீவி மற்றம் ரஹிமாபீவி இருவருக்கும் இடையில் பொது சுவர் ஒப்பந்தம் எழுதப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 சான்றாவணத்தின் அசல் தங்களிடம் உள்ளதா? என்றால் ஆமாம். அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல், நகல் செய்துள்ளீர்கள் என்றால் அசலில் இருந்து தான் நகல் எடுக்கப்பட்டது. வா.சா.ஆ.7 சான்றாவணத்தில் கதீஷாபீவி மற்றும் ரஹிமாபீவி இருவரின் கையெழுத்தும் இல்லை என்றால் சரிதான். அதனால் வழக்கிற்காக மோசடியாக வா.சா.ஆ.7 சான்றாவணத்தை உற்பத்தி செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 சான்றாவணம் செல்லத்தகக்தல்ல ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. 04.09.1994ம் தேதியிட்ட வா.சா.ஆ.8 சான்றாவணம் பஞ்சாயத்து முச்சலிக்கா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.8 சான்றாவணத்தின் நகல் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.8 சான்றாவணத்திலும் கதீஷாபீவி மற்றும் ரஹிமாபீவி இருவரின் கையெழுத்தும் இல்லை என்றால் சரிதான். அதனால் வழக்கிற்காக மோசடியாக வா.சா.ஆ.8 சான்றாவணத்தை உற்பத்தி செய்துள்ளீர்கள் என்றாலும், அதனால் தான் கதீஷாபீவி மற்றும் ரஹிமாபீவி இருவரின் கையெழுத்தும் இல்லை என்றால் சரியல்ல. தாங்களும், தங்கள் சகோதரியும் பிரதிவாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்ததாகவும், ஆக்கிரமிப்பு செய்ததாகவும்

அசல் வழக்கு எண்.152/2008 தாக்கல் செய்வதற்கு பிரதிவாதி அறிவிப்பு அனுப்பினாரா? என்றால் அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பு தான் வா.சா.ஆ.9 சான்றாவணம். மேற்படி அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு வா.சா.ஆ.10 சான்றாவணம் பொய்யான சங்கதிகளை உள்ளடக்கி அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 சான்றாவணமான போட்டோ தொடர்பாக ரசீதோ, யார் எடுத்தது என்பதற்கான ஆவணமோ, C.D யோ தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

**வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

**s/d.Tmt.M.Muruganandhi**
**Principal District Munsif**
**Vedasandur**